# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2364/40 - 2023 දෙසැම්බර් මස 31 වැනි ඉරිදා - 2023.12.31

*2364/40 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 10/2023*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

*4(எ)(3) என்னும் உறுப்புரையின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ, 41இ, 41ஈ மற்றும் 41உ ஆகிய உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அரசியலமைப்பின் 41எ என்னும் உறுப்புரையின் (3) ஆம் பந்தியின் கீழ் அரசியலமைப்புப் பேரவையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
அரசியலமைப்புப் பேரவை.

கொழும்பு,
*2023, திசெம்பர் 31.*

**விதிகள்**

1. இவ்விதிகள் 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அரசியலமைப்புப் பேரவை விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பாகம் 1**

**செயலாளர் நாயகத்தையும் அலுவலர்களையும் நியமித்தல்**

2. (1) (இதனகத்துப்பின்னர் ''பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசியலமைப்புப் பேரவை அரசியலமைப்பின் நியதிகளின்படி அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக அரசியலமைப்பின் உறுப்புரை 41ஈ இன் (1) ஆம் மற்றும் (2) ஆம் பந்திகளின் கீழ் பின்வருவோரை பேரவைக்கு நியமித்தல் வேண்டும்.

(அ) (இதகனத்துப் பின்னர் "செயலாளர் நாயகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செயலாளர் நாயகம் ஒருவர் ; அத்துடன்

(ஆ) பேரவை அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்கள்.

(2) செயலாளர் நாயகம், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றிலிருந்து விரும்பத்தக்கதாக சட்டத்தில் பட்டமொன்றையும் சட்டத்தரணியொருவராக இருபது வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**பாகம் 2**

**செயலாளர் நாயகத்தின் பணிகள்**

3. செயலாளர் நாயகம் -

(அ) 2 ஆம் விதியின் (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறு பேரவையினால் நியமிக்கப்பட்ட பேரவையின் அலுவலர்களின் மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் வேண்டும் ;

(ஆ) அவரது பணிகளை நிறைவேற்றுவதில், பேரவையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு பேரவையின் அலுவலர்களின் சேவையின் நியதி நிபந்தனைகளை கவனத்துட்கெடுத்தல் வேண்டும்;

(இ) பேரவையின் தவிசாளரின் பணிப்பின்மீது, பேரவையின் கூட்டங்களுக்கு அழைத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டங்களை நடாத்துவதற்கு வசதியளித்தலும் வேண்டும் ;

(ஈ) அத்தகைய கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகளையும் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும் ;

(உ) இயைபான அதிகாரிகளுக்கு பேரவையின் முடிபுகளை அறிவித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஊ) பேரவையினால் அவருக்கு குறித்தளிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் பணியைப் புரிதல் வேண்டும்.

**பாகம் 3**

**பேரவையின் பணிகள்**

4. பேரவையானது,-

(அ) அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ (3) இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அரசியமைப்பின் உறுப்புரை 41ஆ இற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு ஆணைக்குழுவினதும் தவிசாளராகவும் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட வேண்டிய தகுதியானதும் தகுந்தவர்களுமான ஆட்களை சனாதிபதிக்கு விதந்துரைத்தல் வேண்டும் ;

ஆயின், அத்தகைய ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளர் ஒருவரின் விடயத்தில், பேரவையானது மூன்று ஆட்களை விதந்துரைத்தல் வேண்டும் ;

(ஆ) அரசியலமைப்பின் உறுப்புரை 41இ இற்கான அடடவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டிய ஆட்கள் தொடர்பில் சனாதிபதியினால் செய்யப்பட்ட விதப்புரைகளை கவனத்திற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விதப்புரைகளை அங்கீகரித்தல் அல்லது மறுத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) காலத்துக்குக் காலம் அரசியலமைப்பினால் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் பேரவைக்கு விதிக்கப்படக்கூடியவாறான அல்லது குறித்தளிக்கப்படக்கூடியவாறான வேறு எவையேனும் கடமைகளையும் பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

**பாகம் 4**

**பேரவையின் கூட்டங்கள்**

5. (1) பேரவையானது, அதன் கூட்டங்களை பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக நேரடியாக, இலத்திரனியல் வழிவகைகள் மூலம் அல்லது மெய்நிகர் தளம் ஒன்றின் மீது அல்லது கலப்பு முறையில் நடாத்தலாம்;

ஆயின் பேரவையானது, அவசியமேற்படுகின்ற போதெல்லாம் பேரவையின் எவரேனும் உறுப்பினரை ஏதேனும் கூட்டத்துக்கு நேரடியாக வருகை தருமாறு தேவைப்படுத்தலாம்.

(2) பேரவையானது, ஏதேனும் கருமத்தின் மீது முடிபொன்றை எய்துவதற்கு முன்னர் பேரவைக்கு முன்னர் உள்ள அத்தகைய கருமம் தொடர்பில் இயைபான எல்லா நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் முடிபுக்கான காரணங்களைப் பதிதலும் வேண்டும்.

6. (1) பேரவையானது, ஆளொருவர் அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ இற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படுவதற்கு விதந்துரைக்கப்படுவதற்கு தகுதியானவரும் தகுந்தவருமானவரா எனத் தீர்மானிப்பதில் பின்வருவனவற்றை கவனத்துட்கெடுத்தல் வேண்டும் -

(அ) அத்தகைய ஆட்களின் நேர்மை மற்றும் நற்பெயர் ;

(ஆ) அத்தகைய ஆட்களின் ஒழுக்கவியல்சார் நடத்தை ;

(இ) அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ இற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுவினால் நிறை வேற்றப்படும் பணியின் தன்மை தொடர்பாக அத்தகைய ஆட்களின் அனுபவம், தகைமைகள் மற்றும் தகுதி ; அத்துடன்

(ஈ) அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது எவரேனும் உறுப்பினராக ஏதேனும் கடமையை அல்லது பணியை நிறைவேற்றுகின்ற அத்தகைய ஆட்களைப் பாதிக்கின்றதான அத்தகைய ஆட்களின் முரண்பட்ட அக்கறைகள்.

(2) பேரவை இப்பந்தியின் (அ) முதல் (ஈ) வரையிலான உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களை மதிப்பீடு செய்வதில், அத்தகைய ஏதேனும் ஆணைக்குழுவுக்கு விதந்துரைக்கப்படவேண்டிய ஆட்கள் தொடர்பில் பேரவையினால் தேவைப்படக்கூடியவாறான தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு எவரேனும் இயைபான ஆள், உயர்தொழில்சார் குழு அல்லது வேறு அதிகார சபையை கலந்தாலோசிக்கலாம்.

(3) பேரவையானது, அரசியலமைப்பின் உறுப்புரை 41எ இன் (2) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறு வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் பேரவைக்கு விதிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் கடமை அல்லது பணி தொடர்பில், பேரவை அத்தகைய எழுத்திலான சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான நடவடிக்கைமுறைக்கும் முறைக்கும் இணங்க அத்தகைய கடமையை அல்லது பணியை புரிதல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

7. (1) (அ) பேரவையானது, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலமும் இலங்கையில் பரந்தளவில் புழக்கத்தில் உள்ள சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உள்ள ஆகக்குறைந்தது மூன்று நாளாந்த செய்தித்தாள்களிலும் அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ இற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளராகவும் உறுப்பினர்களாகவும் விதந்துரைக்கப்படுவதற்கு தகுதியானதும் தகுந்தவர்களுமான ஆட்களிடமிருந்து அக்கறை தெரிவிக்கும்படி கோருதல் வேண்டும்.

(ஆ) பேரவையானது, அதனால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான ஏதேனும் தகவலை அல்லது ஆவணங்களை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதியொன்றினுள் பேரவைக்கு சமர்ப்பிக்குமாறு அத்தகைய விண்ணப்பகாரர்களைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஒராம் பந்தியின் கீழ் பேரவையினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விண்ணப்பம், தகவல் மற்றும் ஆவணங்களை பெற்றுக்கொள்வதன் மேல், பேரவையானது, அத்தகைய ஆள் அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ இன் நியதிகளின்படி

விதந்துரைக்கப்படுவதற்கு தகுதியானதும் தகுந்தவருமான ஆளொருவராக உள்ளாரா என நிச்சயிப்பதற்கு அத்தகைய எவரேனும் ஆளின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

(3) பேரவை இவ்விதியில் குறித்துரைக்கப்பட்டவாறு விதந்துரைக்கப்பட வேண்டிய ஆட்களின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்த பின்னர், அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட ஆட்கள் பற்றிய குறுகிய பட்டிலொன்றை தயாரித்து அவர்களின் பொருத்தப்பாட்டை நிச்சயிப்பதற்கு அவர்களை நேர்காணல் செய்தல் வேண்டும்.

(4) பேரவையானது அரசியலமைப்பின் உறுப்புரை 41ஆ இன் நியதிகளின்படி பேரவையினால் விதந்துரைக்கப்பட்ட ஆட்களின் பெயர்களை, இலங்கையில் பரந்தளவில் புழக்கத்தில் உள்ள சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உள்ள ஆகக்குறைந்தது மூன்று நாளாந்த செய்தித்தாள்களில் வெளியிடுதல் வேண்டும்.

8. பேரவையானது, அரசியலமைப்பின் உறுப்புரை 41இ இன் கீழ் சனாதிபதியினால் செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரையை அங்கீகரிக்காதவிடத்து, பேரவை அதன் முடிபுக்கான காரணங்களுடன் சேர்த்து சனாதிபதிக்கு அத்ததைய முடிபை அறிவித்தல் வேண்டும்.

9. பேரவையினால் ஆக்கப்பட்ட விதிகள் எம்முறை மூலமும் எம்முறையிலும் ஆக்கப்பட்டனவோ அம்முறை மூலமும் அம்முறையிலும் காலத்துக்குக் காலம் திருத்தப்படலாம், வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

EOG 01-0032

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.